பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 19 புதன்கிழமை 05.12.2018 கதிர் 30

**இது ரகசியம் அல்ல!**

2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் மைத்திரிபால சிறிசேன. அவருக்கு மக்கள் ஆணை வழங்கி 4 வருடங்களாகின்றன.

அதற்குப் பின்னர் சுமார் ஏழு, எட்டு மாதங்கள் கழித்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பக்கம் 02



# அரசமைப்புடன் விளையாடாதீர்! சர்வாதிகாரியாகச் செயற்படாதீர்!!

## மைத்திரிக்கு ரணில் கடுந்தொனியில் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 05

சட்டவிரோதமான முறையில் பிரதமர் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும், அவர் தலைமையில் இருந்த போலி அமைச்சரவைக்கு எதிராகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனத்தில்கொண்டு செயற்பட பக்கம் 11

# அரசியல் நெருக்கடிக்கு 7 நாட்களுக்குள் தீர்வு!




## ரணில் மீது சொற்போர் தொடுத்து ஜனாதிபதி மைத்திரி விசேட உரை

கொழும்பு, டிசெம்பர் 05

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்துக்கு இன்னும் ஏழு நாட்களுக்குள் தீர்வு காணப்படும். - இவ்வாறு நேற்று அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ரணில் வடக்கு மக்களை ஏமாற்றினார். தீர்வு கொடுக்க வாய்ப்பிருந்தும் அவர் அதைச் செய்ய வில்லை. ஏமாற்றினார். அதுவே உண்மை. அவரை நீக்க நான் எடுத்த முடிவு என்றும் சரிதான். ஆகவே மீண்டும் அவரைப் பிரதமராக நியமிப்பதில்லை என்ற எனது முடிவில் துளியேனும் மாற்ற மில்லை என்றும் அவர் உறுதியாகக் குறிப்பிட்டார். பக்கம் 02

## நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிக்காது நடப்போம்

### பதவி இழந்த மஹிந்த அதிரடிக் கருத்து



கொழும்பு, டிசெ. 05

தற்போதைய அரசுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை பக்கம் 11

## பொட்டு உயிருடன் இல்லை

### சரத் பொன்சேகா திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 05

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் உயிருடன் இல்லை பக்கம் 11

## இடைக்காலத் தடைக்கு எதிராக மஹிந்த நேற்று மேன்முறையீடு

கொழும்பு, டிசெ. 05

பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளைத் தொடரு வதற்கு மஹிந்த அணியினருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு எதிராக நேற்று பக்கம் 11

## நீதிமன்றத் தடை உத்தரவால் திரிசங்கு நிலையில் மைத்திரி

### அமைச்சுகளின் செயலர்களுடன் நேற்று அவர் அவசரச் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 05

பிரதமரும், அமைச்சர்களும் தமது பதவிகளை வகிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையில், சகல அமைச்சுகளின் செயலாளர்களையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் பக்கம் 11

## மீண்டும் பிரதமராகவுள்ள ரணில் ஜனாதிபதியாகவும் வரவேண்டும்

### சஜித் பிரேமதாஸவின் விருப்பம் இது

கொழும்பு, டிசெ. 05

ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறியதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பக்கம் 02

## பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்

### புறக்கணிக்கிறது மஹிந்த அணி

கொழும்பு, டிசெ. 05

பெரும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் நாடாளுமன்றம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

பிரதமர் பதவியை வகித்த மஹிந்த பக்கம் 11

## இயல்பு நிலையை ஏற்படுத்த அனைவரும் முன்வாருங்கள்!

### சபாநாயகர் விசேட அறிக்கை

கொழும்பு, டிசெ. 05

நாட்டின் அரசியல் நெருக்கடியால் சமூக, பொருளாதார நிலைமைகள் மோசமடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள் பக்கம் 02

## நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான 12 மனுக்கள் மீது இன்றும் விசாரணை

கொழும்பு, டிசெ. 05

நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவு பக்கம் 11

## மாற்று வழி தேடுகிறார் மைத்திரி புதிய பிரதமராக சமல் ராஜபக்ஷ?

கொழும்பு, டிசெ. 05

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த, சமல் ராஜபக்ஷ அல்லது நிமல் சிறிபால டி சில்வாவை பக்கம் 11

## இனியொரு போர் வேண்டாம் கிளிநொச்சியில் போராட்டம்!

நாட்டில் இனியொரு போர் வேண்டாம் என்றும் சமாதானத்தை குழப்பும் செயற்பாடுகளைத் தவிர்க்கக் கோரியும் கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன் பக்கம் 02



## டிப்பர் கொட்டிய மண்ணுக்குள் சிக்கிக் குடும்பத் தலைவர் சாவு!

### மன்னாரில் பரிதாபச் சம்பவம்

மன்னார், டிசெ. 05

மண் அகழ்வில் ஈடுபட்ட குடும்பத் தலைவர் ஒருவர் மண்ணுக்குள் சிக்குண்டு உயிரிழந்தார்.

மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது.

மன்னார் தம்பனைக் குளம் பக்கம் 11

# கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் முடிவு ஏதுமில்லை

## வெள்ளியன்று மீண்டும் கூடிப் பேச முடிவு

கொழும்பு, டிசெ.05

கொழும்பில் இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவு ஏதும் எட்டப்படாமலேயே வெள்ளிக்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஐ.தே.மு. அரசுக்கு ஆதரவளிப்பதாயின் தமிழர் நலன் பேணும் விடயங்களை ஒட்டி எழுத்து மூல உறுதிப்பாட்டை கூட்டமைப்பு பெற வேணடும் என ரெலோ பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

எழுத்து மூல உறுதிமொழியை வலியுறுத்துவது பாதகமான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அதைத் தவிர்ப்பது நல்லது என்ற சாரப்பட சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார் என அறிய வந்தது.

நிபந்தனையாக விதிக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. பலவற்றில் இணக்கமும் எட்டப்பட்டது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல், தற்காலிக இணைப்பையேனும் வலியுறுத்துதல் போன்ற விடயங்கள் இன்னும் பேசப்பட வேண்டியுள்ளன என்று கூறப்பட்டது.

தமிழரசு கட்சி சார்பில் இரா.சம்பந்தன், மாவை சோ.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் –

புளொட் சார்பில் த.சித்தார்த்தன், ஆர்.இராகவன் ஆகியோரும் –

ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், என்.ஸ்ரீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனா கருணாகரன், விநோராதலிங்கம் ஆகியோரும் – நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றினர். (உ)

# மோ.சைக்கிள்கள் மோதல்; நான்கு வயது சிறுவன் பலி

புத்தளம் – கீரியங்கள்ளி ஆண்டிகம பிரதான வீதியின் கல்குளிஸ்ரீ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் உயிரிழந்துள்ளான். மூவர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

ஆண்டிகமபிரதேசத்திலிருந்து உடப்பு பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலும், கீரியங்கள்ளிப் பிரதேசத்திலிருந்து ஆண்டிகம பிரதேசத்தை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளிலும் கல்குளிப் பிரதேசத்தில் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

இந்த விபத்து தொடர்பில் மேலதிகவிசாரணைகளைமுந்தல் பொலிஸாரும் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற கட்சியின் தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க.

ஆகவே, மக்களின் பிந்திய ஆணையைப் பெற்றவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விட ரணில் விக்கிரமசிங்கவுக்கே இன்றைய நிலையில் தார்மீக உரிமை அதிகம்.

மக்களின் – மக்கள் பிரதிநிதிகளின் – அமோக ஆதரவைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்க பக்கமே நாடாளுமன்ற வலிமை உள்ளது.

அத்தகையவரே பிரதமர் பதவிக்கு உரித்துடையவரும் கூட. அத்தகையவரைப் பிரதமராக நியமிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி அடம்பிடிக்கின்றமை கூட அவரின் பதவிப் பொறுப்புக்கு மாறான – அரசமைப்புக்கும் சட்டத்துக்கும் முரணான – நடவடிக்கைதான்.

அதேபோல, நாட்டில் ஓர் அரசு, ஒரு பிரதமர், ஓர் அமைச்சரவையை காலம் தாழ்த்தாமல் ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதி ஆகக்கூடியது மூன்று அமைச்சுக்களைத்தான் – பாதுகாப்பு அமைச்சு, சுழல், சுற்றாடல்துறை, மகாவலி அமைச்சு ஆகியவற்றை மட்டும்தான் – வைத்திருக்க முடியும். மற்றைய அமைச்சுக்கள் அனைத்தையும் குறைந்த பட்சம் ஒரு பிரதமரை நியமித்து அவரிடம் ஒப்படைக்கலாமே தவிர, 'அமைச்சரவையே இல்லை, நானே அமைச்சுக்களை வைத்திருக்கிறேன்' என்று ஜனாதிபதி கூற முடியாது.

*"இந்தத்தவறுகளுக்குஎல்லாம் தேவைப்பட்டால் நீதி, நியாயம் தேடி நீதிமன்றுக்குத்தான் போக வேண்டும். நாம் அதற்குத் தயார். பிரதமர், அரசு, அமைச்சரவைத் தரப்புக்களை நியமிக்காமல் ஜனாதிபதி இழுத்தடிக்கின்றார் என்பதைச்சுட்டுவதற்கு ஓரிரண்டு நாள்களாவது நாங்கள் பொறுத்திருந்து, அதை காரணமாகக் காட்டக் கூடிய சூழலைப் பார்த்திருக்க வேண்டும். இப்போது பார்த்திருக் கிறோம். சரியான சமயத்தில் தேவைப்பட்டால் இதற்கும் நீதிமன்றை நாடுவோம்."* – என்று நேற்று மாலையில் கருத்துத் தெரிவித்தார் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

முன்னதாக, நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான வழக்கு ஏழு நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தின் முன்னால் நேற்று விசாரணைக்கு வந்தபோது அங்கு சுமார் ஒரு மணி நேரம் வாதங்களை சமர்ப்பணம் செய்தார் அவர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி பால சிறிசேன முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம், அச் சமயம் பிரசாரத்தின் போது அவர் ஆற்றிய உரை, 19 ஆவது தி தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப் பட்ட சமயம் அங்கு அவர் நிகழ்த் திய பேச்சு எனஎல்லாவற்றையும்வரிசைப்படுத்தி விளக்கிய சுமந்திரன், இப்போது நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் தமக்கு உள்ளது என்ற சாரப்பட அவர் தரப்பில் முன்வைக்கப்படும் வாதங்கள் எல்லாம், முன்னர் அவர் தெரிவித்த கருத்துகளுக்கு முற்றிலும் தலைகீழானவை என்பதை மன்றில் புட்டுப் புட்டு வைத்தார்.

எது, என்னவோ ஒரு விடயம் மடட்டும் உண்மை. முன்னதாக ஜனாதிபதித்தேர்தல்நடத்தப்பட்டாலே தவிர, இந்த ஜனாதிபதி நவம்பர் வரை பதவியில் இருப்பார் என்பது உறுதி.

இந்த ஜனாதிபதியின் குசும்புத்தனமான அரசியல் நடவடிக்கைகளுக்காக, அடுத்த நவம்பர் வரை சுமந்திரனும் ஏனைய அவரது சட்டத்தரணி அணியும் நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைந்திருக்கும் ஹல்ஸ்டோர்ப்பில் அலைய வேண்டியிரும் என்பது சரிதான் போலும்.

\- மின்னல் -

## இயல்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக முன்வரவேண்டும். நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் அடிப்படையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட என்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்துள்ளேன்.

– இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையில் அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள் உடனடியாக முன்வரவேண்டும். இதன் மூலம் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் மோசமடையாமல் பாதுகாக்க முடியும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கதான் பிரதமராகப் பதவியேற்பார். இது ஐக்கிய தேசிய முன்னணியின் ஏகமானதான தீர்மானமாகும். அதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ரணிலே வேட்பாளராகக் களமிறங்கி வெற்றிவாகை சூட வேண்டும். இது எனது தனிப்பட்ட விருப்பமாகும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

என்னை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறும் பிரதமராகப் பதவியேற்குமாறும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குமாறும் பலர் எனக்கு அழுத்தம் கொடுத்தமை உண்மைதான். ஏன் இப்போதும் அந்த அழுத்தங்கள் தொடர்கின்றன. எனினும், நான் தற்போது கட்சியின் தலைமைப் பொறுப்பையோ அல்லது பிரதமர், ஜனாதிபதி பதவிகளையோ ஏற்பதற்குத் தயாரில்லை.

மைத்திரி –மஹிந்த கூட்டணியின் அரசியல் சதி நடவடிக்கைக்கு எதிராக நாட்டு மக்களின் நலன் கருதி எம்மை அரவணைத்து ஜனநாயக வழியில் ஓயாமல் போராடி வரும் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் பிரதமராகப் பதவியேற்பார். இது ஐக்கிய தேசிய முன்னணியின் ஏகமானதான தீர்மானமாகும். அதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ரணிலே வேட்பாளராகக் களமிறங்கி வெற்றிவாகை சூட வேண்டும். இது எனது தனிப்பட்ட விருப்பமாகும் – என்றார். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மாநாடு நேற்று பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நல்லாட்சிக் கோட்பாட்டை ரணில் விக்கிரமசிங்கவே படுகொலை செய்தார். 62 லட்சம்பேர் வழங்கிய ஆணையை காட்டிக் கொடுத்துவிட்டார். அவர் நாட்டுக்குப் பொருத்தமற்ற அரசியல்வாதியாவார். நாட்டையும், ஐக்கிய தேசியக் கட்சியையும், ஏன் என்னையும் கூடச் சின்னாபின்னமாக்கிவிட்டார்.

தனிப்பட்ட பகைமை காரணமாக ரணிலைப் பதவியைவிட்டு நான் தூக்கவில்லை. நாட்டின் நலனைக்கருதியே அந்த முடிவை எடுத்தேன். 2014 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதியும், 2018 ஒக்ரோபர் 26 ஆம் திகதியும் என்னால் எடுக்கப்பட்ட முடிவுகள் மிகச் சரியானவை. அதில் துளியளவேனும் தவறில்லை என்பதை உணர்கின்றேன்.

நாட்டுக்காக எடுக்கப்பட்ட முடிவுகள் அவை. நல்லாட்சியின் கொள்கைகளைப் பச்சையாகக் கொன்றவர் ரணில். நான் பொறுத்துப் பார்த்தேன். ராஜபக்ஷ ஆட்சியில் நான் இருந்த பொறுமையை விட நான் இதில் பொறுமை காத்தேன்.

மஹிந்தவை நியமித்தமை மூன்று வருட எனது கடினப் பயணத்தின்தாங்கமுடியாதவிளைவே. நாட்டை நாசமாக்கிய ரணில் அந்த கட்சியை வீணாக்கினார். என்னை – எனது ஆட்சியையும் வீணாக்கினார். அதற்குத் தீர்வு அவரைப் பிரதமர் பதவியில் இருந்து விரட்டுவது என்று முடிவெடுத்தேன்.

அவரின் தேவைப்படி நாட்டை நாசமாக்க நான் விடவில்லை. வடக்கு மக்களை ஏமாற்றினார். தீர்வு கொடுக்க வாய்ப்பிருந்தும் அவர் அதை செய்யவில்லை. ஏமாற்றினார். அதுவே உண்மை. அவரை நீக்க நான் எடுத்த முடிவு என்றும் சரிதான்.

5 வர்த்தமானிகளைப் பிரசுரித்தேன். ரணிலை நீக்க, பிரதமராக மஹிந்தவை நியமிக்க, அமைச்சரவையை ஏற்படுத்த, சபையை ஒத்திவைக்க, சபையைக் கலைக்க நான் வர்த்தமானிகளைப் பிரசுரித்தது நிறைவேற்று அதிகாரத்தைப் புனிதமாகப் பயன்படுத்தியே.

ஜேர்மன், இத்தாலி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஆட்சி நிலைமைகளை பாருங்கள். அரசுகள் இல்லாமலே அவை சில காலம் இயங்கின.

உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்றவர்களுக்கு இடைக்காலத் தீர்ப்பே வழங்கப்பட்டுள்ளன. இங்கு தாக்கல் செய்யப்பட்டவை கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழக்குகள் அல்ல.

நீதிமன்றம் குறித்து மக்கள் மனதில் பல எண்ணங்கள் உள்ளன. நான் நீதிமன்றத்தை மதிக்கிறேன். ஆனால் ஒரு சாரார் நீதிமன்றம் நீதியானது என்று கூறுகின்றனர். இன்னொரு தரப்பினர் பக்கச் சார்பானது என்று கூறுகின்றனர். நாங்கள் அரசமைப்பின் படியே நடக்கின்றோம். ரணில் தனது பதவிக்காகத் தூதரகங்களை நாடி நிற்கின்றார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்துக்கு நான் காரணமல்லன். இவை அனைத்துக்கும் ரணிலே காரணம். எனவே, 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியில் திரண்டுவந்து சொன்னாலும், ரணிலை மீண்டும் பிரமராக நியமிக்கமாட்டேன். எனக்கு தனிப்பட்ட கோபம் அவருடன் இல்லை. ஆனால் இந்த நாட்டுக்கு அவர் பொருத்தமற்றவர்.

என்னுடன் கோபிக்கும் ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர்களே. உங்கள் கட்சியின் தலைவர் உங்கள் கட்சியை நாசமாக்கிவிட்டார். நல்ல தலைவர்கள் வழி நடத்திய கட்சி இன்று வீணாக்கப்பட்டு விட்டது.

இந்த நிலைமையில் தான் நாங்கள் நாட்டுக்கு ஏற்ற முடிவுகளை எடுக்க வேண்டி வந்தது.

அரசியல் குழப்பத்துக்கு இன்னும் 7 நாட்களுக்குள் முடிவு கட்டப்படும் என்ற உத்தரவாதத்தை என்னால் வழங்கமுடியும் – என்றார்.

அதேவேளை, தமதுரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது, ஜனாதிபதி சரமாரியாக விமர்சனங்களை முன்வைத்தார். உரை முழுவதும் ரணில் மீது தொடுக்கப்பட்ட சொற்போராகவே அமைந்திருந்தது. (ஐ)

## இனியொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி கிளிநொச்சி பொதுச் சந்தைவரை முன்னெடுக்கப்பட்டு அங்கு கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது,

நாட்டில் தற்போது நிலவும் சமாதானமான சூழலைப் பேணுமாறு தெரிவித்தும், இனியொரு போர் வேண்டாம் எனத் தெரிவித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது,

இந்த போராட்டத்தில் சிவில் பாதுகாப்பு திணைக்கள உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், நாட்டில் இனி ஒரு யுத்தம் எமக்கு வேண்டாம். இதற்கு முன்னர் நடைபெற்ற யுத்தத்தில் பல உயிர்களையும் சொத்துக்களையும் இழந்துள்ளோம். அவ்வாறு இடம்பெற்ற யுத்தத்தில் நாம் எதையும் சாதிக்க வில்லை. இந்த நிலையில் தற்போது நாட்டில் உள்ள சமாதான மான சூழலைக் குழப்புவதற்குச் சிலர் செயற்படுகின்றனர். தமது சுய அரசியல் இலாபத்திற்காக இவ்வாறு சிலரால் திட்டமிட்டு நாட்டில் சமாதானமற்ற சூழலை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில்தான் மட்டக்களப்பில் பொலிஸார் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்புலத்தில் முன்னாள் போராளிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உண்மையில் நாமும் முன்னாள் போராளிகள்தான். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டில் சமாதானமற்ற சூழலை ஏற்படுத்த முயற்சிக்கமாட்டோம்.

புனர்வாழ்வு பெற்று வந்த எம்மில் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஏனைய முன்னாள் போராளிகளுக்கும் இவ்வாறு வேலை வாய்ப்புக்களை வழங்கும் பட்சத்தில் அவர்களும் தமக்கான வாழ்வாதாரத்தை முன்னெடுப்பார்கள்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சில அரசியல் கட்சிகள் முன்னாள் போராளிகள் ஒரு சிலருக்குப் பணம் கொடுத்து இவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றன – என்றனர். (ஐ)

# பிரதமருக்கு நீதிமன்று இடைக்காலத் தடை கொமன்வெல்த் வரலாற்றில் முதல் முறை!



## இனியாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஜனாதிபதி ஏற்கவேண்டும் எனச் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 05

கொமன்வெல்த் வரலாற்றில், முதல் முறையாகப் பிரதமர் ஒருவர் செயற்படுவதற்கு நீதிமன்றம் ஒன்று, இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணியும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவர் தலைமையில் இருந்த அமைச்சரவைக்கு எதிராகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத்தடை உத்தரவைவரவேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இனியாவது இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டமையை ஏற்றுக்கொண்டு, பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டியது ஜனாதிபதியின் அரசமைப்புக் கடமையாகும். கொமன்வெல்த் வரலாற்றைப் பின்பற்றி ஜனாதிபதி அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படும்போது, மஹிந்த தரப்பைச் சேர்ந்த மூவர் மாத்திரமே நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

இடைக்காலத் தடை உத்தரவு வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே, அநுர பிரியதர்சன யாப்பாவும், சந்திம வீரக்கொடியும் இறுக்கமான முகத்துடன் அவசரமாக எழுந்து வெளியே சென்றனர்.

உத்தரவு வாசிக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, இந்த உத்தரவை தாம் எதிர்பார்க்கவில்லை என்றும், போலியான ஆவணங்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை தாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று மஹிந்தவின் விசுவாசிகளில் ஒருவரான சந்திம வீரக்கொடி தெரிவித்திருந்தார்.

எனினும், மஹிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



கண்டி மாவட்டத்தில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற தேசிய ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான நாட்டார் குழு இசை போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யாழ் வட்டு. இந்துக் கல்லூரி மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். போட்டியில் பங்குபற்றிய மாணவிகளுடன் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

## 48,400 சிகரெட்டுக்களுடன் நேற்று கட்டுநாயக்காவில் இருவர் கைது

கொழும்பு, டிசெ. 05

ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுக்களை, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வந்த இலங்கையர்கள் இருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துச் சுங்க அதிகாரிகளினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 46 மற்றும் 48 வயதுடைய இரு வியாபாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும், நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜாவில் இருந்து கல்ப் விமான சேவைக்குச் சொந்தமான ஜி - 9501 என்ற விமானத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களின் பயணப் பொதியில் இருந்து 242 பெட்டிகளில் அடைக்கப்பட்ட 48,400 சிகரெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமையுடன், இவற்றின் பெறுமதி சுமார் 26 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில், சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## ரூபவாஹினிக்கு சென்ற ஹிருணிகா

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் செய்திகள் வெளியிட்டதைப் போன்றே அரச ஊடகங்கள் செய்திகளை வெளியிடுமாறு கோரிக்கை விடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குச் சென்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, மாரசிங்க, அலவத்துவல ஆகியோர் நேற்றுக் காலை தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபன வளாகத்துக்குச் சென்று, அதன் தலைவரைச் சந்திக்க முயற்சித்துள்ளனர்.

எனினும் தலைவர் இல்லாத காரணத்தால் ஊடக அமைச்சின் செயலாளரிடம் இந்த விடயம் குறித்து வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்ற பின்னர், ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்தில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டதாகவும், இதனையடுத்து அங்கு விசேட பாதுகாப்புப் படையணியினர் அழைக்கப்பட்டதாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

## அலோசியஸ், பளிசேன தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு, டிசெ. 05

பெர்ப்பர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பளிசேன ஆகிய இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறிவு மோசடி குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை நேற்றுக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த இருவரையும் டிசெம்பர் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

மத்திய வங்கியின் பிணைமுறிவு மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ரயிலில் மோதுண்டு யானை உயிரிழப்பு



பனிக்கன்குளத்தில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் ரயிலில் மோதுண்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

பனிக்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நேக்கி வந்த தபால் ரயிலில் மோதுண்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த யானையை அகற்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பனிக்கன்குளம் கிராம அலுவலர் உள்ளிட்டோர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இந்த யானை கடந்த இரண்டு தினங்களாகப் பனிக்கன்குளம் கிராமத்துக்குள் புகுந்து மக்களுக்குப் பல்வேறு இன்னல்களைக் கொடுத்து வந்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு ஏழு மணி முதல் ஊருக்குள் புகுந்த யானைகள் மக்களுக்குத் தெல்லை கொடுப்பது தெடர்பில் மக்களால் மாங்குளம் பெலிஸார் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஊடாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதினும் அவர்கள் யானையை துரத்த வருகை தராததால் யானை ரயிலில் மோதுண்டு இறந்துள்ளது எனக் கூறப்பட்டது.

(ஐ)

## மலையகமெங்கும் பணிப்புறக்கணிப்பு

### தொழிற்சாலைகள் முடக்கம்



கொழும்பு, டிசெ. 05

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்குப் பெருந்தோட்டக் கம்பனிகள் மறுப்பு தெரிவித்துவருவதால் – அதற்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் மலையகமெங்கும் நேற்றுப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பகுதிகளில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அதன் பணிகளை முடக்கும் வகையில் நேற்று முதல் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் குதிக்குமாறு தொழிலாளர்களுக்கு, இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அறைகூவல் விடுத்திருந்தார். இதற்கமையவே நேற்றுக் காலை முதல் தொழி லாளர்கள் – பணிக்குச் செல்லாமல் போராடி வருகின்றனர்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களும் இத்தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

(ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதிமன்றமே நாட்டை மீட்கும்

வாக்குரிமையின் விழுமியங்களை, ஜனநாயகத்தின் மாண்புகளை போட்டு மிதிப்பது என்பதில் ஒரே தீர்மானமாக இருக்கின்றார் போலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தன்னுடைய சின்னத்தனமான அரசியல் போக்குச் செயற்பாடு காரணமாக இரண்டாவது நாளாக இந்த நாட்டில் ஒரு பிரதமரோ, ஓர் அமைச்சரவையோ, ஓர் அரசாங்கமோ - இல்லாத வெறிதான நிலைமையை ஏற்படுத்தி நிற்கின்றார் அவர்.

இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் ஒரு கரும்புள்ளி நிலைமை இது.

தேர்தல்கள் வரும் போதும், நாடாளுமன்றத்தில் அணிகள் மாறும் போதும், நாட்டில் அரசுகள் மாறுவது வழமை. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு பிரதமரும், அவரது அமைச்சரவையும் பதவி விலகும்போது - புதிய பிரதமரும் அமைச்சரவையும் பதவியேற்கும் வரை - பழைய பிரதமரும் அமைச்சரவையும் பதவியில் தொடரும்படி கேட்கப்படுவது வழமை.

அதனால் ஓர் அரசுக்கோ, பிரதமர் பதவிக்கோ, அமைச்சரவைக்கோ வெற்றிடம் இல்லாத நிலைமை நாட்டில் நீடிக்கும்.

ஆனால், வரலாற்றில் இப்போது முதல் தடவையாக அந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு பிரதமர் இறந்தால் கூட, சில மணி நேரத்துக்குள் புதிய அல்லது பதில் பிரதமர் தற்காலிகமாகவேனும் பதவியேற்றுவிடுவார்.

இப்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாக இருக்கின்ற பிரதமரும் அமைச்சரவையும் பதவி இழந்து ஒன்றரை நாள்கள் தாண்டியாயிற்று. அரசும் பிரதமரும், அமைச்சரவையும் இல்லாத ஓர் அநாதை தேசமாக இலங்கைத் தீவின் நிர்வாகம் இழுபடுகின்றது.

தமது சிறுபிள்ளைத்தனமான அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க மறுத்து, அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்டே நாட்டை நிர்வகிப்பேன் என்று அரசியல் அரிச்சுவடி கூடப் படிக்காதவர் போல பேசுகின்றார் நாட்டின் ஜனாதிபதி.

நாடாளுமன்றத்தின் 225 எம்.பிக்களும் சேர்ந்து ஓர் எம்.பியை இவர்தான் எங்களின் நம்பிக்கைக்குரிய பிரதமர் என்று உறுதிபடுத்தி நின்றாலும் அவரை நிராகரித்துத் தம்பாட்டில் வேறு ஒருவரை நியமிக்கவோ அல்லது ஒருவரையும் நியமிக்காமல் காலத்தை இழுத்தடிக்கவோ தனக்கு அதிகாரம் இருப்பதாக நாட்டின் ஜனாதிபதி கூறுகின்றமை அரசியல் - நிர்வாக - குளறுபடியின்றி வேறில்லை.

இப்படி இந்த ஜனாதிபதி கடந்த ஒன்றரை மாத காலமாக இழைத்து வரும் அரசியல் குளறுபடிகள் ஒவ்வொன்று தொடர்பிலும் - நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி - அவ்வப்போது நீதிமன்றுக்குச் சென்று நீதியும், நியாயமும் பெறுவதுதான் மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உள்ள ஒரே மார்க்கம் போலும்.

ஜனநாயக மாண்புகளையும், மரபுகளையும், வழக்காறுகளையும் தம்மிஷ்டப்படியும், எதேச்சாதிகாரப் போக்கிலும் ஜனாதிபதி மீறி வருவராயின் நீதிமன்றம் மூலமே அவருக்கு உரிய பதிலை - பாடத்தை- வழங்க முடியும்.

ஏற்கனவே தமக்கு அதிகாரம் இல்லாத விடயத்தில் தலையை ஒட்டி, நாடாளுமன்றத்தை நேரத்துடன் கலைத்த அவரது நடவடிக்கைக்கு எதிராகவும் -

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையே பெறாத ஒருவரைப் பிரதமராக்கி, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அந்தப் பிரதமர் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் அவரைப் பதவியில் தொடரவிட்ட அரசியல் அத்துமீறலுக்கு எதிராகவும் -

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மூலம் தக்க பதிலடி பாடமும் புகட்டியமை போன்றே இனியும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான - 115 எம்.பிக்களின் - ஆதரவைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க மாட்டேன் என்று சட்ட ரீதியான காரணம் எதுமின்றி அரசியல் அடாவடித்தனமாக மறுத்து நிற்கும் போக்குக்கு எதிராகவும் -

நாட்டில் ஒரு பிரதமரும், ஓர் அரசும், ஓர் அமைச்சரவையும் இல்லாத நிலைமையை நாள்கள் கடந்தும் அனுமதிக்கும் பொறுப்பற்ற போக்குக்கு எதிராகவும் -

இனி, நீதிமன்றுக்குப் போகவேண்டியிருக்கும்.

இன்னும் ஓராண்டு காலம் வரை இந்த ஜனாதிபதி பதவியில் இருக்கப் போகின்றார். அவரது இத்தகைய அரசியல் குளறுபடிகளுக்கு எதிராக அடிக்கடி நீதிமன்றுக்குப் போவது தான் வழியாக இருக்கும் போல.

# ஜனாதிபதி தவறை உணர்ந்து ஆட்சியை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்

## கொழும்பு சத்தியாக்கிரக போராட்டத்தில் ஹக்கீம்





கொழும்பு, டிசெ. 05

ஜனாதிபதி தனது தவறை உணர்ந்து, பெரும்பான்மை பலம் இருக்கின்ற எங்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இனிமேலும் இதில் இழுத்தடிப்புச் செய்யப்படுமாக இருந்தால், நாங்கள் இதைவிட தீவிரமாக வேறு பல நடவடிக்கைககளில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் சிவில் அமைப்புகள் மற் றும் தொழிற் சங்கங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தி வரும் சத்தியாக்கிரக போராட்டம் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு;

நாட்டில் ஜனநாயகத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் நடைபெறும் போராட்டங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிக வீரியத்துடன் முன்னணியில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பின்கதவால் அதிகாரத்தைப் பறித்த கும்பலுக்கு எதிரான போராட்டம் இனிமேலும் நீடிக்க முடியாது.

சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு வழங்கியுள்ளது. கண்முன்னால் தெரிகின்ற தோல்வியை ஏற்றுக்கொண்டு, இவர்கள் கௌரவமாக பதவி விலகாவிட்டால் இதைவிட வீரியமான சில நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க நேரிடும் என்ன எச்சரிக்கை விடுக்கிறோம்.

ஜனாதிபதியின் அரசமைப்பு மீறலினால் முழு நாட்டுக்குமே அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை இல்லாதிருந்தும், வெட்கமின்றி ஆட்சியில் தொங்கிக்கொண்டிருப்பவர்கள் நீதிமன்றத்தின் இறுதி முடிவு வரும்வரை காத்திருக்காமல் இப்பொழுதே கௌரவமாக விலகிக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்களும் மாத்திரம் அரசாங்கமல்ல. அரசியல் தலைமைகளுக்கு அப்பாலும் அரச பொறிமுறை செயற்படமுடியும். தங்களது அமைச்சு கதிரைகளில் அமர்ந்துகொண்டு மட்டும்தான் அரசாங்கத்தை நடத்தலாம் என்று சிலர் நினைக்கலாம். அரசாங்க பொறிமுறை உரிய முறையில் செயற்படுகிறது. இதுபற்றி மேன்முறையீட்டு நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பின் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகள் முழுமையாக முடக்கப்படவில்லை. இது மக்களை பாதிக்கும் வகையில் இல்லாமல், அமைச்சுப் பதவிகளை திருட்டுத்தனமாக வகித்துக் கொண்டு அநீதியான அரசாங்கத்தைக் கொண்டு கொள்ளையடிக்கும் கூட்டத்துக்கு எதிராகவே இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாங்கள் சட்டத்துக்கு கட்டுப்பட்டு மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் எங்களது போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். தங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேறக்கூடாது என்பதற்காக பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி, சர்வதேசம் எமது நாடாளுமன்றத்தை கீழ்த்தரமாக பார்க்கின்ற அளவுக்கு அவர்களது அதிகாரவெறி காணப்படுகிறது.


ஆளும் கட்சி என்று கூறிக்கொள்பவர்கள் செய்த அட்டகாசங்களினால் நாட்டின் ஜனநாயகம், அரசியல், பொருளாதாரம் என்பன நாளுக்கு நாள்சீரழிந்துகொண்டுபோகின்றன. அரசமைப்பை மீறி, தான் எடுத்த முடிவினால் நாட்டை அதல பாதாளத்துக்கு இட்டுசென்றிருக்கின்ற பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வழங்கிய கடிதத்தின் பிரகாரம், ஐக்கிய தேசிய முன்னணிக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை கருத்திற்கொண்டு புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையை அமைப்பதற்கு ஜனாதிபதி உடனடியாக முன்வரவேண்டும்.

இனிமேலாவது ஜனாதிபதி தனது தவறை உணர்ந்து, பெரும்பான்மை பலம் இருக்கின்ற எங்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இனிமேலும் இதில் இழுத்தடிப்புச் செய்யப்படுமாக இருந்தால், இதைவிட தீவிரமாக நாங்கள் வேறுபல நடவடிக்கைககளில் இறங்க வேண்டியிருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம் - என்றார்.

இதில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என பலதரப்பட்டோரும் கலந்துகொண்டனர்.

# பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்



கொழும்பு, டிசெ.05

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, லோட்டஸ் வீதி சுற்றுவட்டத்துக்கு அருகில் வைத்து பொலிஸார் நேற்று இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

(ஐ)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16 2018
தீர்மானமெடுத்தலில் பெண்களையும்
அங்கீகரிப்போம்
சமத்துவம் காப்போம்!
யாழ் சமூக செயற்பாட்டு மையம்
JSAC

நாளை
06.12.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: அனுசம் பி.இ 5.37 வரை
திதி : சதுர்த்தசி பி.ப 1.02 வரை
சுபநேரம் : 7.47 – 9.17 வரை
இராகுகாலம் : 1.47 – 3.17 வரை

# நீதிமன்று வழங்கிய தீர்ப்பினால் ஜனாதிபதிக்கு தடை கிடையாது

## கூறுகிறார் சுசில் பிரேம் ஜயந்த்

கொழும்பு, டிசெ. 05

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பினால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகச் செயற்பட எந்தத் தடையும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம் ஜயந்த் தெரிவித்தார்.

ஜனாதிபதி சட்ட ஆலோசனையின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ எம்.பியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற விசேட ஊடக மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதிக்கும் மஹிந்தவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், ஜனாதிபதியின் கருத்துக்களுக்குப் பொருந்தும் வகையிலே மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

மேன்முறையிட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டத்தரணிகள் குழு முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,இந்த சந்திப்பு ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டது.இது மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பான சந்திப்பு அல்ல என்று குறிப்பிட்டார். (ஐ)

# ரணிலை பிரதமராக்குவதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை!



## ஜயம்பதி விக்ரமரத்ன சுட்டிக்காட்டு

தனது தனிப்பட்ட விருப்பத்துக்கு அப்பால்நாட்டின்சட்டத்திட்டங்களுக்கு அமைய, ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிப்பதை தவிர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வேறு வழியில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது –

நாட்டை இதற்கு முன்னர் ஆட்சி செய்த ஜனாதிபதிகள், தங்களுக்கு விரும்பாதவர்களுக்குப் பிரதமர் பதவியை வழங்கவேண்டிய நிலைமை காணப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி டீ.பீ. விஜேதுங்க, 1994 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமித்துள்ளார். அதேபோன்று,முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் 2004ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிக்கவேண்டியேற்பட்டது. அந்த வகையில் ஜனாதிபதிக்கு ரணிலுடன் வேலை செய்ய முடியுமா? இல்லையா? என்பது தனிப்பட்ட விடயமாகும்

எனவே தற்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்துள்ள ரணில் சட்டரீதியாக பிரதமராக நியமிக்க வேண்டியது அவசியம் – என்றார். (ஐ)

# வான் குடை சாய்ந்தது; 6 பேர் கவலைக்கிடம்

கொழும்பு, டிசெ. 05

திருகோணமலையில்இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்று கெப்பிற்றிக்கொல்லாவ, துடுவெவ பகுதியில் குடை சாய்ந்ததில் 6 பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் – திருகோணமலை வீதியின் 13 ஆவது கிலோமீற்றர் பகுதியில் இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற வானிலை காரணமாக வேகமாக பயணித்த வான் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)



# வீதியில் தரித்து நின்ற ஓட்டோ மாயமானது

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியின் இலுப்பையடிப் பகுதியில் நிறுத்துவைக்கபட்டிருந்த ஓட்டோ காணாமற்போயுள்ளதாக அதன் உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலயத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓட்டோவில் திரு கோணமலை சென்ற உரிமையாளர் இரவு 11 மணிய ளவில் வவுனியாவுக்கு மீண்டும் வந்ததுடன் இலுப் பையடிப் பகுதியில் உள்ள அவரது வர்த்தக நிலயைத் துக்கு முன்பாக அதனை நிறுத்திவிட்டு வர்த்தக நிலையத்தில் உறங்கியுள்ளார்.

அதிகாலை 5 மணியளவில் எழுந்து பார்த்த போது ஓட்டோ காணாமற் போனமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் குற்றப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ – 100)

# எல்லாப் பிரச்சினைக்கும் ’19’ தான் முழுக் காரணம்!

## விமல் வீரவன்ஸ சீற்றம்

கொழும்பு, டிசெ. 05

இப்போதைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் 19ஆவது திருத்தமே காரணம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிறைவேற்று அதிகாரம் பலப்படுத்தப்பட்டிருந்தால் எவரும் நீதிமன்றத்தை நாடியிருக்க முடியாது.

19ஆவது திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைத்தபோது எவரும் நீதிமன்றம் செல்லவில்லை. காரணம் நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை காணப்பட்டது. இதன்போது எமது தேசியம் பாதுகாக்கப்பட்டது. பிரதமராக மஹிந்த நியமிக்கப்பட்டிருக்காவிட்டால் சமஷ்டி ஆட்சி குறித்து விவாதம் அரங்கேறியிருக்கும். வடக்கு – கிழக்கு இணைப்பு மற்றும் பொலிஸ் அதிகாரம் ஆகியவை மாகாணங்களுக்கே உரியது எனக் கூறி மத்திய அரசு இவ்விடயங்களில் தலையிட முடியாதெனத் தீர்மானங்கள் எட்டப்பட்டிருக்கும் – என்றார். (ஐ)

# போரின் பின் அங்கக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பு வடக்கில் அதிகரிப்பு

## ஜெய்ப்பூர் நிறுவனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05

வடக்கில் போரின் பின்னரான காலப் பகுதியில் உடல் அங்கக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கும் வீதம் அதிகரித்து உள்ளதாக ஜெய்ப்பூர் நிறுவன வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போரின் பின்னரான காலப் பகுதியில் ஜெய்ப்பூர் நிறுவனத்தில் சுமார் 7 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பயன்பெற்று உள்ளனர். அவர்களுக்கு எமது நிறுவனத்தின் ஊடாக செயற்கை அவயவங்கள் பொருத்தி உள்ளோம்.

போரின் பின்னரான கால பகுதியில் விபத்துக்கள் மூலம் அதிகளவானவர்கள் அவயவங்களை இழந்த நிலையில் செயற்கை அவயவங்களை எமது நிறுவனத்தின் ஊடாகப் பொருத்தியுள்ளனர். அதேவேளை நீரிழிவு நோய் , முடக்கு வாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தவர்கள் . அவயவங்களின் செயற்பாட்டை இழந்தவர்கள் பயன்பெற்று உள்ளனர்.

அத்துடன் போரின் பின்னரான கால பகுதியில் குழந்தைகள் பிறப்பிலையே அவயவங்களை இழந்த நிலையிலும் , அவயவங்கள் செயற்பாடாத நிலையிலும் பிறக்கின்றனர்.

அதற்கான காரணங்கள் இதுவரை ஆய்வுகளின் ஊடாக கண்டறியப்பட வில்லை. ஆனால் தாய்மார்கள் போருக்கு முகம் கொடுத்தமையால் , ஏற்பட்ட பாதிப்புக்களாக இருக்காலம் எனும் சந்தேகம் உள்ளது என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஜெய்ப்பூர் நிறுவன அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ)

# 2 பொலிஸார் சுட்டுப் படுகொலை; பல கட்ட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 05

மட்டக்களப்பு – வவுணதீவுப் பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், பல கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் இதற்கமைய பொலிஸ் அதிகாரிகளின் கீழ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடைய புலனாய்வுப்பிரிவின்தலைவர்என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை என்றும், முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய எதிர்வரும் நாள்களில் சந்தேகநபர் தொடர்பான சகல தகவல்களையும் வெளிப்படுத்த முடியும் என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொலிஸ்கான்ஸ்டபிள்களின் கொலையுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் 48 வயயதுடைய நபரொருவர் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கலாசார விழா நாளை குருநகரில்

யாழ்ப்பாணம், டிசெ. 05

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். பிரதேச கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலாசார விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் குருநகர் கலாசார மண்டபத்தில் யாழ். பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தயானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சிறப்பு அதிதியாக கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள் பிரகாசம் கலந்து கொள்வார்கள்.

கலாசார விழாவில் “யாழ் பாடி” நூல் வெளியீடு, “யாழ் ரத்னா” விருது வழங்கல், இளம் கலைஞர் கௌரவிப்புடன், நாடகம், நடனம், நாட்டுக் கூத்து, இஸ்லாமிய கஸீதாவும் இடம்பெறும்.

யாழ் ரத்னா விருது பெறும் கலைஞர்கள், காத்தான் மகேந்திரன்(நாடகம்), சின்னப்பு அன்ரன் சௌந்தரநாயம் (ஒப்பனை), திருமதி பஞ்சநாயகி பிரான்சிஸ் அம்மா சின்னத்துரை (இலக்கியம், எழுத்துத்துறை) அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் (நாடகம்), நாகலிங்கம் தனேந்திரன் (சமூகப்பணி), அறுக்காஞ்சி செலஸ்ரின் (சிற்பம்),

இவர்களுடன் கலைத்துறை சான்றிதழ் பெறும் இளம் கலைஞர்கள், சிவனு விவேகானந்தன் (கைவினைக் கலை), திருமதி அப்துல் வஹாப் நதீரா (இலக்கியம் மற்றும் எழுத்துத்துறை), திருமதி பற்றிக் டயஸ் யூக்கலிஸ்ரர் (இசை), திருமதி சுதர்சினி கரன்சன் (நடனம்), சாள்ஸ் விஜயரட்ணம் ஜோன் கலிஸ்ரஸ் (நாடகம்), எஸ்பீரியர் ஜெனாத் (நாட்டுக் கூத்து), வின்ஸ்லோ ஜயந் பேர்மினஸ் (நாட்டுக் கூத்து). (19)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCIES

Applications are invited by me up to 20th December, 2018 from suitably qualified persons for the following posts.

**1. PROJECT MANAGER – CONSTRUCTION WORKS**

**Qualifications**

(a) Should posses a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Civil Engineering

**or**

Should posses a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Quantity Surveying

or

Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka (IESL)

**AND**

(b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.

or

Posses a corporate membership from a recognized Institute of Quantity Surveying

**AND**

(c) A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well as managing direct labour.

**Salary Scale :** U-EX 1(II)
- Rs. 50,625 – 3x1,125 – 54,000(EB)55,335;12x1,335 – 71,355p.m. (as at 01.01.2020)

**Selection :** By Structured Interview.

**2. CHIEF MARSHAL**

**Qualifications:**

(1) A holder of the post of Deputy Chief Marshal in the Marshal service in the University System and confirmed in that post with not less than five (05) years of satisfactory service in that grade.

**Physique –**
Height - 5' 5"
Chest - 32" deflated

**Note :** Preference will be given to those who actively participated in Sports activities, Social Welfare Activities and Recreation programmes within the university and at National Level.

**OR**

(2) An Officer not below the rank of Lieutenant Colonel in Sri Lanka Armed Forces/equivalent rank in Sri Lanka Police with active participation in sports activities.

**Salary Scale :** U-EX 1(II)
- Rs. 50,625 – 3x1,125 – 54,000(EB)55,335;12x1,335 – 71,355p.m. (as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**3. CHIEF SECURITY OFFICER, GRADE II**

**Qualifications :**

i. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the Other Armed Services

**OR**

ii. A person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in security work.

**OR**

iii. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years of satisfactory service in those grades.

**Salary Scale :** U-EX 1(II)
- Rs. 50,625 – 3x1,125 – 54,000(EB)55,335;12x1,335 – 71,355p.m. (as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**4. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION)**

**Qualifications:**

An Attorney-at-Law with A Degree in Law/Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

**OR**

An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

**Salary Scale :** U-EX 1(II)
- Rs. 50,625 – 3x1,125 – 54,000(EB)55,335;12x1,335 – 71,355p.m. (as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**5. CURATOR (LANDSCAPE) GRADE III**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/ Horticulture/Floriculture/Forestry from a recognized University / HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale : U-EX 1(II)**
- Rs. 50,625 – 3x1,125 – 54,000(EB)55,335;12x1,335 – 71,355p.m. (as at 01.01.2020)

**Selection :** By Interview.

**6. UNIVERSITY MEDICAL OFFICER**

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner. The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**NOTE:** One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale :** U-MO 1(II)-Rs. 55,350 – 10 x 1,335 ; 1 x 1,630 – 70,330/- p.m. (as at 01.01.2020)

**Selection :** By Interview.

**7. MARSHAL GRADE II**

**Qualifications:**

1) A Graduate from a recognized University.
Physique: Height : 5' 5"
Chest: 32" deflated

**Note:-** Preference will be given to those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**OR**

2) A person who has experience in a post not below the rank of Major in the Armed Forces in Sri lanka or not below the equivalent rank in Sri lanka Police

**Age: Between 30 - 45 years**

**Salary Scale :** U-MN 3(II) - Rs.42,885 -18X660 - 54,765 p.m (as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**8. AUDIO VISUAL TECHNICAL OFFICER – GRADE II**

**Qualifications:**

(i) Diploma in Technology of the Open University of Special Engineering apprenticeship Certificate issued from 1989 by the National Apprenticeship Board or National Diploma in Technology or City and Guilds Final Certificate in the field of Electronics or Power, together with one year's experience in relevant video work

**or**

Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with one(01) years experience in relevant video work.

**OR**

(ii) Pass in 3 subjects at the G.C.E(A/L) Examination in Science one sitting and six(06) years experience in Audio Visual work.

**Age: Not more than 45 years.**

**Salary Scale:** U-MN3(II) - Rs.42,885 -18X660 - 54,765 p.m (as at 01.01.2020)

**Selection:** By Interview

**9. MANAGEMENT ASSISTANT (SHROFF), GRADE III**

**Qualifications:**

1) Should have passed G.C.E(Ordinary Level) Examination in six subjects at one sitting with credit passes in
i) Sinhala Language/ Tamil Language
ii) English Language/ English Literature
iii) Mathematics

**AND**

2) Should have Passed in all subjects at G.C.E.(Advanced Level) examination (except the Common General Paper) at one sitting. One of the subjects should be Accountancy.

3) Preference will be given to those who possess the following;
a. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.
**&**
b. Two years of experience in the use of computer application packages

**Age: Not more than 30 years.**

**Salary Scale :** U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m (as at 01.01.2020)

**Selection :** By Test and Interview

**10. MANAGEMENT ASSISTANT (STORE-KEEPING), GRADE III**

**Qualifications:**

1) Should have passed G.C.E(Ordinary Level) Examination in six subjects at one sitting with credit passes in
i) Sinhala Language/ Tamil Language
ii) English Language/ English Literature
iii) Mathematics

**AND**

2) Should have Passed in all subjects at G.C.E.(Advanced Level) examination (except the Common General Paper) at one sitting.

**AND**

3) One year experience in Store-keeping and/or a pass in the subject of Commerce at the G.C.E(Ordinary Level) Examination or in the subject of Accountancy at the G.C.E.(Advanced Level) examination

4) Preference will be given to those who possess the following;
a. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.
**&**
b. Two years of experience in the use of computer application packages

**Age: Not more than 30 years.**

**Salary Scale :** U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825 p.m (as at 01.01.2020)

**Selection :** By Test and Interview

**11. PUBLIC HEALTH INSPECTOR GRADE III**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Age: Not more than 45 years.**

**Salary Scale:** U-MT 1 (IIIA) - Rs. 31,625 – 7x300; 10x355 -37,275 p.m. (as at 01.01.2020)

**Selection :** By Interview

**12. INSTRUMENT CARETAKER CUM REPAIRER, GRADE III (DANCING INSTRUMENTS)**

**Qualifications:**

i. a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings;

**OR**

b) A Pass in 8th Standard and who have satisfactorily completed 5 years' permanent service in the UGC or a Higher Educational Institution.

ii. Knowledge and ability in –
Repairing Kandyan and Low Country Drums, Davul, Tammettam, Uddekki, Raban etc. Should have at least two years experience in repairing the above instruments in a Higher Educational Institution, Government Department or a Public Corporation.

iii. Experience in maintenance of issue registers and storage of instruments.

**Note:** Preference will be given to those with knowledge and ability in playing dancing instruments.

**Age: Not more than 40 years.**

**Salary Scale:** U-MN1(IIIA) - Rs.30,725-17x300-35,825p.m. (as at 01.01.2020)

**Selection By:** Practical test and interview

**13. BOOK BINDER, GRADE II**

**Qualifications:**

i. (a) Should have passed the 8th Standard and have at least 5 years' experience as a Binder in a recognized institution;

**Age: Not more than 40 years.**

**Salary Scale:** U-PL 3(III) - Rs.29,915-16x270-34,235 p.m. (as at 01.01.2020)

**Selection By:** Trade Test and Interview

**14. CARPENTER, GRADE II**

**Qualifications:**

i. Pass in the 8th standard.

ii. Should be conversant with the
a. Various types of joints and preparation of such joints for work in carpentry used in building and furniture trade;
b. Use of various types of tools, various species of wood and reading of drawings;
c. Reading of scales up to 1/32" accurately.

iii. Not less than 2 years' experience in carpentry.

**Age: Not more than 40 years.**

**Salary Scale:** U-PL 3(III) Rs.29,915-16x270-34,235 p.m. (as at 01.01.2020)

**Selection By:** Trade Test and interview

**AGE LIMIT :** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.15/- Stamped envelope of 23X10 cm in size. Only Applications sent on the specified form will be accepted. (Please annex copies of relevant documents). The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar / Establishments [Non –Academic] of this University on or before 20/12/2018.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**03.12.2018**

# கிடைப்பதை எடுப்பதே உசிதம் என்று செயற்படுகிறது தமிழ்க் கூட்டமைப்பு

## சாடுகின்றார் விக்னேஸ்வரன்

**வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பல்துறை சேவையாளர்கள் விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிறன்று வவுனியாவில் நடந்தது. அங்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் மிகுதி பகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது.**

(நேற்றைய தொடர்ச்சி)

மக்கள் பிரதிநிதிகளின் வாதப்பிரதி வாதங்கள் வன்முறைகளாக மாற்ற மடைய நாம் இடம்கொடுத்தலாகாது.

எது எவ்வாறிருப்பினும் எமது நாடு என்ற வகையில் எம்மைப் பிற நாட்டவர்கள் எள்ளி நகையாடுவதை நாம் இடமளிக்கலாகாது. அரசியல் என்பது எப்பாடுபட்டேனும் எமக்கெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களை பெயரிழக்கச் செய்யும் ஒரு வித்தையாகவே இன்று மாறியுள்ளது.


அரசியல் ரீதியாக ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவர் மீது சேறு அள்ளிப் பூசுவதே அரசியல் என்று ஆகிவிட்டது. மக்கள் நலம் இச் சேறு பூசலின்போது அடிபட்டுப்போய் விடுகின்றது. சேறு பூசலும் அதற்கெதிரான செயற்பாடுகளுமே முதன்மை அடைகின்றன.

### சிவசக்தி பேரம் பேசப்பட்டார் என ஊடகங்கள் பிழையான தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூட பேரம் பேசப்பட்டார் என ஊடகங்கள் பிழையான பல தகவல்களை வெளியிட்டு வந்துள்ளன. எனக்குத் தெரிவித்த அளவில் அவர் வேடிக்கையாகக் கூறிய ஒரு விடயத்தைப் பதிவு செய்து, ஊடகங்கள் அதை ஊதிப் பெருப்பித்து மக்கள் மனங்களில் அவரைப்பற்றிய ஒரு தப்பபிப்பிராயத்தை உருவாக்க முயன்றுள்ளன என்பதே உண்மை எனக் காண்கின்றேன்.

சிவசக்தி ஆனந்தனுடன் நான் பெரிதாக நெருங்கிப் பழகாதபோதும் அவரின் நடைமுறைகள் அவரை ஒரு துரோகியாகக் கணிக்கக்கூடியவாறு எந்நிலையிலும் அமைந்திருக்கவில்லை. எமது மக்கள் நீண்ட காலப் போரின் பின்னராக அனுபவிக்கின்ற துன்ப துயரங்களில் இருந்து இன்றைய நிலையில் ஓரளவாவது அவர்களைப்பாது காக்க வேண்டுமாயின் தம்பி சிவசக்தி ஆனந்தனின் எண்ணக்கருவில் உருவாகியுள்ளன போன்ற சிறப்பான திட்டங்களும் முன்மொழிவுகளும் ஏனைய அரசியல் தலைவர்களினது எண்ணங்களிலும் உருவாக வேண்டும்.

மாறாக உண்மை பேசுபவர்களை அடக்கியாள முனைவதும் புளுகு மூடைகளை அவிழ்த்துக் கொட்டுபவர்களை உயரே தூக்கி வைத்து கொண்டாடுவதுமான நிலையே இன்று அரசியலில் வலுப்பெற்றுள்ளது. இந்த அரசியல் நிலை மாற்றப்படவேண்டும்.



எமது அரசியல் முன்னெடுப்புக்களில் சட்டத்தின் வாயிலாக அரசமைப்பு ரீதியாக எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரித்துக்களைப் பெற்றுக் கொடுப்பதையேநான் முதன்மைப்படுத்தி வருகின்றேன்.

கிடைப்பதை எடுப்பதே உசிதம் என்று வாழ்ந்து வரும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் நிலை அங்கத்தவர்களுக்கும் ஏனைய பிரதிநிதிகளுக்கும் எனது செயற்பாடு சற்று விசனத்தை உண்டுபண்ணியிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. எனினும் எனது செயற்பாடுகள் நாம் மக்களுக்கு 2013ல் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதை மக்கள் கவனிக்க வேண்டும்.

### சமஷ்டி வேண்டும்

எமது மக்களின் விடிவிற்காக அவர்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக அவர்களுக்கான உரித்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே நாம் பாடுபட்டு வருகின்றோம். இந்த நாட்டில் தமிழ் மக்கள் சகல உரித்துக்களுடனும் சமஷ்டி முறையிலான ஓர் அரசியல் கட்டமைப்பின் கீழ் சுதந்திரமாக வாழக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும்.

ஆனால் எம்முடன் ஒத்த அரசியல் கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் கூட பல்வேறு திசைகளில் பயணப்படுகின்ற நிலை ஒன்று உருவாகி வருகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். தத்தம் கட்சி ரீதியான அவர்களின் சிந்தனைகளே பல சிக்கல்களை உருவாக்கி வருகின்றன.

இந்த நிலையில் மேலும் ஒரு கட்சி அவசியமா என்று சிலர் கேட்கின்றார்கள். நான் புதியதொரு கட்சியை உருவாக்கியதன் ஊடாக ஏனைய கட்சிகளுடன் பகைத்துக் கொண்டேன் என்றோ அல்லது அவர்களை உதாசீனம்செய்து விட்டேன் என்றோ பொருள் கொள்ளக்கூடாது.

ஒத்த கருத்துடையவர்களைச் சேர்த்துக் கொண்டு தமிழ் மக்களின் விடிவுக்காக ஒரு நேர் வழியில் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஓர் அரசியல் முன்னெடுப்பின் ஊடாக எமது இலக்கை அடைய முயற்சி செய்யவே விரும்புகின்றேன். என்னோடு இணைந்து கொண்டு சேவையாற்ற விரும்புகின்ற அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றேன்.

### மக்கள் நன்மை கருதி உழைக்க முன்வாருங்கள்

கட்சிகளுக்கிடையே உள்ள பேதங்களை மறந்து எமது மக்கள் நன்மை கருதி ஒற்றுமையுடன் உழைக்க முன்வாருங்கள் என அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் பகிரங்க அழைப்பு மூலம் அழைப்பு விடுக்கின்றேன். எனினும் எமது கொள்கைகளுக்கு மாறாக இதுவரை செயற்பட்ட தமிழர் விரோதக் கட்சிகள் எம்முடன் இணைந்து செயலாற்ற முன்வந்தாலுங் கூட அவர்களை இணைத்துக் கொள்வது கடினம்.

இந்நிலையில் பொதுமக்களிடையே இனவாதங்கள், மதவாதங்கள், சாதிப் பிரிவினைகள், பிரதேச வாதங்கள் ஆகியவற்றைத்தூண்டிவிட்டு மக்களைப் பிளவுபட வைத்து தமது காரியங்களை இலகுவாக முன்நகர்த்துகின்ற அரசியல் வாதிகள் சிலர் என் மீது பழி சுமத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை நகைப்பிற்குரியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை நான் கலைத்துவிட்டதாக ஒரு சாரார் குற்றஞ் சாட்ட இன்னொரு சாரார் எனக்கு அரசியல் அனுபவம் எதுவும் இல்லை என்கின்றார்கள்.

பிழையான கருத்துக்களின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணுவதில் எமது மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படாது. ஒற்றுமை என்பது தகுந்த கொள்கை ரீதியான அடித்தளத்தில் இருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும். அடுத்து அவர்கள் கூறுவது போல அரசியல் அனுபவம் என்பது உண்மைக்குப் புறம்பான விடயங்களை அவ்வப்போது மக்கள் நம்பக்கூடிய வகையில் உரத்துப் பேசி அவர்களை நம்ப வைக்கின்ற தன்மையே என்றால் போலிப்பித்தலாட்டம் ஆடுவதே அரசியல் அனுபவம் என்றால் அந்த அனுபவம் என்னிடம் இல்லை என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

### உண்மைக்குப் புறம்பான விடயங்களை உண்மைபோல எடுத்துக்கூறத் தெரியாது

எனக்கு எமது மக்களை ஏமாற்றத் தெரியாது. அவர்களுக்கு உண்மைக்குப் புறம்பான விடயங்களை உண்மை போல எடுத்துக்கூறத் தெரியாது. அதனால்தான் எமது தலைவர்கள் எதிர்பார்த்த கைப்பொம்மையாக என்னால் ஆட முடியாது போனது.

எமது மக்கள் பலர் எமது மக்கள் சந்திப்பின்போது என்னிடம் எடுத்துக் கூறிய துயரச் சம்பவங்களும் அவர்களால் தீர்க்கமுடியாத கவலைகளுந் தான் என்னைக் கல்லாக இறுக வைத்துவிட்டன. அவர்கள் துயர் துடைக்க வெறுமனே அண்டிப் பிழைத்தல் வழியாகாது என்ற முடிவுக்கு வந்தேன். இதனால் தான் எனது பதவிக்காலம் முடிவுற்ற நிலையிலும் நான் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஒரு வாடகை இல்லத்தில் வசித்து வருகின்றேன்.

எனது கொழும்பு வாசஸ்தலத்தில் பிள்ளைகள், பேரன் பேத்திகளுடன் அளவளாவி மகிழ்ந்திருக்க வேண்டிய இத் தருணத்தில் நான் அவற்றையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு என்னை நம்பி, எனக்குப் பெருந்தொகையான வாக்குகளை வழங்கி, முதலமைச்சராக்கிய வடபகுதி மக்களுக்கு என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் நான் தொடர்ந்தும் எனது மக்களுடன் வாழ்ந்து வருகின்றேன்.

### அரசியல்வாதிகள் குறித்து அவதானமாக இருங்கள்

2013 இல் ஒரு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரம் பேர் சேர்ந்து எனக்கு வாக்களித்திருந்தார்கள் என்றால் இப்பொழுது கட்சி ரீதியாகப் பிரிந்து செல்பவர்களுக்கு மேலதிகமானோர் கொள்கை ரீதியாக என்னுடன் சேர்ந்து பயணிக்க விரும்புகின்றமையைக் காண்கின்றேன். எனவே போலிக் குற்றச்சாட்டுக் களை முன்வைக்கின்ற அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தொடர்பில் அவதானமாக இருங்கள் என்று எனது அருமை மக்களிடம் நான் கூறி வைக்கின்றேன்.

வடக்கில் இருந்தாலென்ன கிழக்கில் இருந்தாலென்ன எப் பகுதிகளில் இருந்தாலும் நாம் அனைவரும் தமிழர்கள், தமிழ் உறவுகள் என்ற நிலைப்பாட்டில் எமது முன்னெடுப்புக்கள் அமைய வேண்டும். அதற்கு பொதுமக்களாகிய உங்களின் ஆதரவு என்றென்றும் கிட்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இன்றைய இந்த நிகழ்வில் பாராட்டுக்களைப் பெறும் அனைத்து பல்துறை விற்பன்னர்களையும் இத் தருணத்தில் வாழ்த்திக் கொண்டு எனது அன்பிற்குரிய சகல வன்னி மக்களுக்கும் எனது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்து எனது உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.-என்றார்.

(முற்றும்)

# மைத்திரியுடன் இனி பேசப்போவதில்லை

## ஐ.தே.க. திட்டவட்ட முடிவு



கொழும்பு, டிசெ. 05
நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தாலும் கூட ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிடிவாதமாக தெரிவித்துவிட்டமையால், இனி அவருடன் பேச்சு நடத்தப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

பேச்சுக்கள் முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, இந்தப் பேச்சு தோல்வியில் முடிந்துள்ளது. ஜனாதிபதியை நாங்கள் மீண்டும் சந்திக்கப் போவதில்லை. அவருடன் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை.

தான் விரும்பும் ஒருவரையே பிரதமராக நியமிக்க முடியும் என்றும், அவ்வாறான ஒருவருடனேயே தன்னால் பணியாற்ற முடியும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அதற்கு நான், பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கு அவ்வாறான ஒரு விதிமுறை அரசமைப்பில் இல்லை என்றும், எனவே இவ்வாறு நிபந்தனை விதிக்க முடியாது என்று கூறினேன்.

ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும்பான்மை பலம் இருந்தாலும், அவர் அதற்கு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அவரைப் பிரதமராக நியமிக்க தான் விரும்பவில்லை என்று கூறினார்.

ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முந்திய அரசை மீண்டும் பதவிக்குக் கொண்டு வர அவர் விரும்பினாலும், ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நியமிக்க மாட்டேன் என்று கூறினார்.

அவர், உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் இடைக்கால உத்தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதை விரும்பாமல் இருக்கலாம் என்றும், இந்த இடைக்கால உத்தரவுகள் மாற்றமடையாமல் இருக்கலாம் என்பதால், அவர் இறுதி தீர்ப்பு வரை காத்திருக்க விரும்பக் கூடும் என்று தெரிவித்தார். (ஐ)

## 12 ஆயிரம் வெடிபொருள்கள் வடக்கில் 2 ஆண்டுகளில் மீட்பு



வடக்கில் கண்ணிவெடியகற்றல் செயற்பாடுகளில் ஈடும் ஸார்ப் தொண்டு நிறுவனத்தால் கடந்த 2 ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட பணிகளில் 12 ஆயிரத்து 452 அபாயகரமான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வடபகுதியில் கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் தொண்டு நிறுவனமானது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் கடந்த நவம்பர் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் 6 இலட்சத்து 67 ஆயிரத்து 431 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 12 ஆயிரத்து 452 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலைப் பகுதியில் முன்னெடுத்து வருகின்றன என்று ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார் – என்றுள்ளது. (ஐ)

# கடும் குழப்பத்தில் ஜனாதிபதி மைத்திரி

## முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடு



கொழும்பு, டிசெ. 05
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் மாலையில் இரு வெவ்வேறு சந்திப்புகளிலும், குழப்பமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவினால், தற்போது, பிரதமரோ, அமைச்சரவையோ இல்லை என்றும், அடுத்த 24 மணி நேரத்துக்குள், தான் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்றும் அவர் கூறியிருந்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும், ஐக்கிய தேசிய முன்னணியுடன் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய பேச்சுக்களின்போது, அதற்கு மாறான கருத்தை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை ஒப்புக்கொள்ள ஜனாதிபதி தயாராக இல்லை. அந்த உத்தரவு தனக்கு இன்னமும் அதிகாரபூர்வமாக வழங்கப்படவில்லை என்று அவர் வலியுறுத்தினார். அந்த உத்தரவு கிடைத்த பின்னரே, அதுபற்றிப் பரிசீலிப்பேன் என்று அவர் கூறினார் எனப் பேச்சுக்களில் பங்கேற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளார் என மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த பின்னணியிலேயே ஜனாதிபதிஇரண்டு நேற்றுமுன்தினம் மாலையில் குழப்பமான கருத்துக்களை வெளியிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஐ)

## தேர்தல் ஒன்றைக் கோரும் எம் போராட்டம் தொடரும்

### நாமல் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 05
தேர்தல் ஒன்றை கோரும் எமது போராட்டம் தொடரும் என மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைவர்கள் சட்ட ஆலோசனைகளைப் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உயர்நீதிமன்றத்தில் நாங்கள் மேன்முறையீடு செய்வோம். தேர்தல் ஒன்றைக் கோரும் எமது போராட்டம் தொடரும் என நாமல் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வித்தியா படுகொலை வழக்கின் முதலாவது சந்தேகநபர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05
புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் நிரபராதியாக தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிரான பொலிஸாரை அச்சுறுத் திய வழக்கைச் சட்ட மா அதிபர் மீளப் பெற்றுக்கொண்டார். அதனால் சுமார் 14 மாதங்களின் பின்னர் அந்த வழக்கிலிருந்தும் பூபாலசிங்கம் இந்திரகுமார் விடுவிக்கப்பட்டார். அத்துடன், அவர் சுமார் 3 ஆண்டுகள் 6 மாதங்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் விடுவிக்கப் பட்டுள்ளார்.

புங்குடுதீவு வித்தியா கொலை வழக்கின் முதலாவது சந்தேகநபரான பூபாலசிங்கம் இந்திரகுமார் நிரபராதி என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற சிறப்பு நீதாயவிளக்கம், கடந்த ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி தீர்ப்பளித்து விடுவித்தது.

எனினும் மாணவி வித்தியா படுகொலை வழக்கின் சாட்சியான பொலிஸ் உத்தியோகத்தரான கோபி என்பவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் வைத்துக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டு பூபாலசிங்கம் இந்திரகுமார் மீது பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது. அந்த வழக்கு கடந்த 14 மாதங்களாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தது.

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் முன்வைக்கப்பட்ட குற்றப் பத்திரிகையில் பொலிஸ் உத்தியோகத்தர் கோபி சாட்சியாக இல்லை என ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனால் பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிரானவழக்கை மீளப்பெற்று அவரை விடுவிப்பது தொடர்பான ஆலோசனையைச் சட்டமா அதிபரிடம் கோரி ஊர்காவற்றுறை பொலிஸாரால் அறிக்கை அனுப்பிவைத்தனர். எனினும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் முடிவு வருவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் பூபாலசிங்கம் இந்திரகுமார் சார்பில் அவரது மனைவி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

வறுமை காரணமாக மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்ய சட்டத்தரணி ஒருவரை நியமிக்க முடியாத நிலையில் இந்திரகுமாரின் குடும்பத்தினர் அவதியுற்றனர். எனினும் இளம் சட்டத்தரணி சிவலிங்கம் ரிஷிகேசன் இலவசமாக முன்னிலையாகி இந்திரகுமாருக்குப் பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி சி.ரிஷிகேசனுடன் சட்டத்தரணி வி.திருக்குமரனும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்னிலையாகி இந்திரகுமார் சார்பான பிணை மனுவுக்கு மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், எதிர் மனுதாரரான சட்டமா அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சட்டமா அதிபர் திணைக்கள அரச சட்டவாளர் மன்றில் முன்னிலையானார். பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிரான வழக்கை மீளப்பெறுவதாக மன்றில் விண்ணப்பம் செய்தார். அதனால் அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பூபாலசிங்கம் இந்திரகுமார் விடுவிக்கப்பட்டார்.

மாணவி வித்தியா, 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி புங்குடுதீவில் கும்பல் ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டு படு கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை யுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட் டில் 2015ஆம் ஆண்டு மே 16ஆம் திகதி பூபாலசிங்கம் இந்திரகுமார் முதலாவது சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டார். அவர் சுமார் 3 ஆண்டுகள் 6 மாதங்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டார். (ஐ)

# ‘2.0’ படம் 4 நாள்களில் ரூ. ஆயிரம் கோடி வசூல்

## ரஜனி-சங்கர் கூட்டு மீண்டும் சாதனை

பிரம்மாண்ட இயக்குநர் சங்கர் இயக்கத்தில் ரஜனிகாந்த் – அக்ஷய் குமார் நடித்துத் திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கும் ‘2.0’ படம் வசூலில் புதிய சாதனை படைத்துள்ளது. நல்ல வரவேற்பு கிடைத்துள்ள நிலையில் அது, 4 நாள்களில் இந்தியப் பணத்தில் ரூ.400 கோடி (இலங்கைப் பணத்தில் சுமார் ஆயிரம் கோடி ரூபா) வசூலித்துள்ளது.

கடந்த வியாழனன்று சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகிய 2.0 முதல் நாளில் மட்டும் உலகமெங்கும் இந்தியப் பணத்தில்ரூ.120 கோடியை வசூல் செய்திருந்தது. 3டி தொழில்நுட்பம், 4டி ஓடியோ மற்றும் கிராபிக்ஸ் காட்சிகளுக்கு முக்கியத்துவம் தந்து ஹொலிவுட் படங்களுக்கு இணையாகப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.



படத்தை பார்த்த அனைவரும் இது ஒரு புது அனுபவம் என்று பாராட்டியுள்ளனர். இந்தநிலையில் படம் வெளியாகிய 4 நாள்களில் ரூ.400 கோடியை வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. படத்தின் வசூல் குறித்த தகவலை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் 2.0 படத்திற்கு நல்லவரவேற்பு கிடைத்துள்ளதால் அங்கும் படத்திற்கு கூடுதல் திரைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# புயலால் இருப்பிடம் இழந்த கிராமம் 18 நாள்களாகச் சுடுகாட்டில் தஞ்சம்

## முத்துப்பேட்டையின்வல நிலைமை

கஜா புயலால் பாதிக்கப்பட்ட முத்துப்பேட்டையில் உள்ள ஒரு கிராம மக்கள் முறையான அரசு முகாம் இல்லாததால் கடந்த 18 நாள்களாக அருகில் உள்ள சுடுகாட்டில் தஞ்சமடைந்துள்ள அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கஜா புயல் டெல்டா மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களை கடுமையாக தாக்கியதில் வீடு உடைமைகள், தென்னை மரங்கள், வாழைத் தோப்புகள் அனைத்தையும் இழந்தனர். லட்சக்கணக்கான மின் கம்பங்கள் சாய்ந்தமையால் மூன்று மாவட்டங்களில் குக்கிராமங்களில் மின்சாரம் கடுமையாக துண்டிக்கப்பட்டது.

வரலாறு காணாத சேதத்தை உருவாக்கிய புயலால் தாங்கள் 30 ஆண்டுகள் பின்னோக்கி போய்விட்டோம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கஜா புயலுக்கு இதுவரை 63 பேர் உயிரிழந்துள்ளனர். 12 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. புயல் தாக்கிய பகுதிகளில் அரசின் நிவாரணபணிகள் முறையாகசென்று சேரவில்லை என்கிற விமர்சனம் இன்றுவரை உள்ளது.

தனியார் அமைப்பினர், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் என பலரது நிவாரண பணிகள் இல்லையென்றால் உயிர்பலி இன்னும் அதிகமாகியிருக்கும். வீடுகளை இழந்த மக்கள், மின்சாரம் இன்றி, குடிதண்ணீர் இன்றி இருள் சூழ்ந்த கிராமங்களில் இன்றும் தவித்து வருகின்றனர்.

தமிழக அரசு தீவிரமாக



நிவாரண மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் அது அனைவரையும் சென்று சேரவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. சாதாரணமாக புயல்பாதித்த பகுதிகளில் உள்ள மக்களை நிவாரண முகாமில் அரசு அதிகாரிகள் தங்க வைப்பார்கள். ஆனால் பல குக்கிராமங்களில் இன்னும் அரசு அதிகாரிகள் போகவே இல்லை என்ற விமர்சனம் உள்ளது.

திருத்துறைப்பூண்டி தாலுகா முத்துப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள பின்னத்தூர் ஊராட்சி தெற்கு ஜீவா தெருவில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கஜா புயலால் வீடுகளை முற்றிலும் இழந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட 36 குடும்பத்தினருக்கு நிவாரண முகாமோ, முறையான தங்குமிடமோ ஏற்படுத்தித் தர அரசு அதிகாரிகள் யாரும் வராத நிலையில் வீடு இல்லாத அவர்கள் வேறு வழியில்லாமல் அருகில் உள்ள சுடுகாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

# உத்தரப்பிரதேசத்தில் இனி பசுக் கன்றுகள் மட்டும்தான்!

## காளைகள் உருவாகாமல் தடுப்பு; மாநில அரசு தீவிர நடவடிக்கை

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் சாலையில் அலையும் காளை மாடுகளைக் கட்டுப்படுத்தவும், காளை மாடுகள் பிறப்பை குறைக்கும் வகையிலும், இனி பசுக்களுக்கு பசுக் கன்று மட்டும் பிறக்கும் வகையில் பரிசோதிக்கப்பட்ட விந்தணுக்களைச் செலுத்தும் திட்டத்தை தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, பசு மாடுகளுக்கு விந்தணுக்கள் செலுத்தப்படும் முன், அதில் காளை மாடுகள் பிறக்கும் சாத்தியமுள்ளவை பிரித்து தனியாக எடுக்கப்பட்டு, பசு கன்றுகள் பிறக்கும் சாத்தியமுள்ளவை மட்டுமே செலுத்தப்படும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் பயன்பாட்டுக்கு உதவாத காளை மாடுகள் பிறப்பைக் கட்டுப்படுத்த முடியும் என்று உ.பி. அரசு நம்புகிறது.

உ.பி.யில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி நடக்கிறது. அங்கு முதல்வராக யோகி ஆதித்யநாத் இருந்து வருகிறார். ஏற்கனவே அந்த மாநிலத்தில் பசுமாடுகளைக் கொல்வதற்கும், அங்கீகாரம் இல்லாத கடைகளில் மாட்டிறைச்சி விற்கவும் தடை இருக்கிறது. இப்போது, காளை மாடுகள் பிறப்பைக் கட்டுப்படுத்த புதிய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

பாலியல் ரீதியாகப் பிரிக்கப்பட்ட விந்தணுக்கள் என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு உ.பி. அரசு நேற்றுமுன்தினம் முறைப்படி அனுமதி வழங்கியது.

உ.பி.யி உள்ள இத்வா, லட்சுமிபூர் கேரி, பாரபங்கி ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் சோதனை முயற்சியாகச் செய்து பார்க்கப்பட்டதில் வெற்றி கிடைத்துள்ளது. இதில் ஏறக்குறைய 90 முதல் 95 சதவீதம் வெற்றி கிடைத்துள்ளதால், இந்தத் திட்டத்தை மாநிலத்தில் உள்ள 75 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



இது குறித்து உ.பி. அரசின் செய்தித்தொடர்பாளர் சிறீகாந்த் சர்மா கூறியவை வருமாறு:–

சோதனை முயற்சியாக இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தியதில் 581 பசுக்களுக்கு விந்தணுக்களைச் செலுத்திப் பார்த்ததில், 522 பசுக்களுக்குப் பசு கன்றுகள் பிறந்துள்ளன. ஏறக்குறைய 90 சதவீதம் இது வெற்றி பெற்றுள்ளது. ஆதலால், இந்தத் திட்டத்துக்கு அரசு முறைப்படி ஒப்புதல் வழங்கி அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

மாநிலத்தின் பாரம்பரிய பசு ரகங்களான சாஹிவால், கிர், ஹர்யான்வி, தார்பார்கர், கங்காத்ரி ஆகிய பசுக்கள் இனப்பெருக்கம் செய்யப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்போர் ரூ.300 செலுத்திப் பயன்பெறலாம்.

இந்தத் திட்டத்தின் நோக்கமே பசுக்களின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்தி, உற்பத்திக்கு உதவாத காளை மாடுகள் எண்ணிக்கையைக் குறைப்பதுதான். அடுத்த 4 ஆண்டுகளில் சாலைகளில் கட்டாக்காலிகளாக அலையும் காளைகள் குறைந்துவிடும். காளை மாடுகள் பெருக்கத்தை குறைப்பதன் மூலம் விளைநிலங்கள் சேதப்படுத்தப்படுவது தடுக்கப்படும், சாலைகளில் திரியும் போது ஏற்படும் விபத்துக்களும் குறையும். – இவ்வாறு சர்மா தெரிவித்தார்.

# இந்தியாவில் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களின் மீது 30 வருடங்களாக 4ஆயிரம் கிரிமினல் வழக்குகள்

## விசாரணையின்றித் தேக்கம், தனி நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவு

புதுடில்லி,டிசெ.05

இந்தியாவில் முன்னாள் மற்றும் தற்போதைய எம்.பிக்கள்,எம்.எல்.ஏக்கள் மீது கடந்த 30 ஆண்டுகளாக, 4 ஆயிரத்து 122 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என இந்திய உச்ச நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கேரளா, பிஹார் மாநிலங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும்எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் மீதான கிரிமினல் வழக்குகளை விசாரிக்க தனி சிறப்பு நீதிமன்றம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

பா.ஜ.கவைச் சேர்ந்த வழக்கறிஞர் அஸ்வானி குமார்



உபாத்யாயா என்பவர் உச்சநீதிமன்றத்தில் கடந்த பொதுநலன் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் அரசியல்வாதிகள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றால் அவர்கள் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிக்க வேண்டும், இந்த வழக்குகளை விசாரணை செய்துதீர்ப்பு வழங்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம், கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி பிறப்பித்த உத்தரவில், எம்.பி, எல்.எல்.ஏக்கள் மீதான வழக்குகளை விசாரணை செய்ய சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும், அந்த வழக்குகளை ஓர் ஆண்டுக்குள் முடித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தது.

மேலும், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மீதான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருக்கும் விவரங்களையும், விசாரணை நடந்து வருவது குறித்தும் அறிக்கைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு இருந்தது. மேலும், வழக்குக்கு உதவியாக, மூத்த வழக்கறிஞர் விஜய் ஹன்சாரியாவை நீதிமன்றம் நியமித்தது.

இந்நிலையில், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மீது பல்வேறு மாநிலங்களின் உயர் நீதிமன்றங்கள், கீழ் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் கிரிமினல் வழக்குகள் குறித்த விரிவான விவரங்களும், போதுமான அளவுக்குச் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்த அறிக்கையும் உச்ச நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே முன்னாள், இந்நாள் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மீது கடந்த 30 ஆண்டுகளாக 4 ஆயிரத்து 122 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. 264 வழக்குகளில் விசாரணை நடந்து வருகிறது. கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு வழக்குகளில் குற்றச்சாட்டு ஏதும் பதிவு செய்யப்படாமலேயே இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

## அரசமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ஜனாதிபதி சர்வாதிகாரியாக நடக்காமல் அரசமைப்பைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதுதான் அவருக்கு அழகு. இல்லையேல் பெரும் விளைவுகளை அவரே சந்திக்க வேண்டி வரும்.

– இவ்வாறு கடும் எச்சரிக்கை விடுத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அலரி மாளிகையில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அரசமைப்புக்கு முரணாக என்னைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றி அந்த இடத்துக்கு மஹிந்த ராஜபக்ஷவை நியமித்தார். பெரும்பான்மைப் பலம் இல்லாத மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அமைச்சரவையையும் அவர் நியமித்தார். இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை நாம் நிறைவேற்றினோம். ஆனால், அதனைப் பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாக ஜனாதிபதி செயற்பட்டார். சர்வாதிகாரத்துடன் அவர் நடந்தார் – நடக்கின்றார். இந்நிலையிலேயே, நாம் நீதிமன்றத்தை நாடிச் சென்றோம்.

சட்டவிரோதமான முறையில் பிரதமர் பதவியில் இருந்த மஹிந்தவுக்கு எதிராகவும், அவர் தலைமையில் இருந்த போலி அமைச்சரவைக்கு எதிராகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. எனவே, இனியாவது ஜனாதிபதி திருந்தி நடக்க வேண்டும். அவர் நினைத்தபடி – அவரின் சொந்தவிருப்பத்துக்கிணங்க பிரதமரைத் தீர்மானிக்க முடியாது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளவரே பிரதமராக நியமிக்கப்பட வேண்டும். அந்தப் பெரும்பான்மைப் பலத்துடன் நாம் இருக்கின்றோம். இதை ஜனாதிபதிக்குப் பல தடவைகள் புரியவும் வைத்துள்ளோம். எனவே, நாம் மீண்டும் ஆட்சியமைக்க ஜனாதிபதி வழி விட வேண்டும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயகத்தை நிலைநிறுத்தவே நாம் போராடி வருகின்றோம். எமது நிலைப்பாடு சரியானது என்பதை நீதிமன்றத் தீர்ப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் அரசமைப்பை மீறும் செயல் என அன்றே நாம் சுட்டிக்காட்டினோம். உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடைத்தீர்ப்பும் அதை உறுதிப்படுத்தியது.

இங்கு சர்வாதிகார ஆட்சிக்கு ஒருபோதும் இடமளியோம். எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வாதிகாரியாக நடக்காமல் அரசமைப்பைப் பின்பற்றி நடக்கவேண்டும். இதுதான் அவருக்கு அழகு. இல்லையேல் பெரும் விளைவுகளை அவரே சந்திக்க வேண்டி வரும்.

மக்கள் தம்முடன்தான் இருக்கின்றனர் எனக் கூறி அரசமைப்பை நீக்குவதற்கு ஹிட்லர் அன்று நடவடிக்கை எடுத்தார். ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் சட்டமொன்றை இயற்றினார். இவ்வாறு இங்கும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், மக்கள் தமது பின்னாலேயே நிற்கின்றனர் என்று வதந்தி பரப்புகின்றனர்.

நாம் அரசமைப்பை மதித்து நாட்டு மக்களின் நலன் கருதியே செயற்படுகின்றோம். எமது கட்சிக்குள் முரண்பாடுகள் இல்லை. நாம் ஓரணியில் செயற்படுகின்றோம்.

ஜனாதிபதியின் விருப்பதுக்கிணங்க நாடாளுமன்றத் தேர்தல்தான் தேவை என்றால் சட்டபூர்வமான அரசு ஒன்று முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். பின்னர் விசேட தீர்மானமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றித் தேர்தலுக்குச் செல்ல நாம் தயார். தேர்தலுக்குப் பயந்தவர்கள் நாம் அல்லர். எந்தத் தேர்தலையும் அரசமைப்பின் பிரகாரம் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம்.

இந்த இக்கட்டான நிலைமையில் அரசமைப்பைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். அரசமைப்புடன் விளையாட வேண்டாம் எனச் சகலரையும் கேட்டுக்கொள்கின்றோம். அதை மதிக்காவிட்டால் இருந்து பயன் இல்லை. ஜனநாயகக் கட்டமைப்பின் கீழ செயற்பட அனைவரும் முன்வரவேண்டும் – என்றார். (ஐ)

## நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுத் தீர்ப்பை அவமதிக்காமல் நாங்கள் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு நேற்றுக் காலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தற்போதைய அரசுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடை உத்தரவுத் தீர்ப்பை ஆட்சேபித்து இன்று (நேற்று) உயர்நீதிமன்றத்தில் நாங்கள் மேன்முறையீடு செய்கின்றோம். எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. யாரும் குழம்பிக்கொள்ளத் தேவையில்லை. எனினும், நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்காமல் நாங்கள் செயற்பட வேண்டும். எங்கள் பயணம் தொடரும். ஆட்சி அல்ல. தேர்தல் ஒன்றே எங்களின் உடனடித் தேவை – என்றார். (ஐ)

## பொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் பொட்டு அம்மான் உயிருடன் இருக்கிறார் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தார்.

மட்டக்களப்பில் இரண்டு பொலிஸார் சுட்டுக் கொலை செய்யப்பட்டமையுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாகவும், மீண்டும் புலிகள் புத்துயிர் பெறுவதாகவும் கருணா தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை மறுக்கும் பொன்சேகா, போலியான தகவல்களை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுள்ளார்.

சரத் பொன்சேகா தனது பேஸ்புக் கணக்கில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

நாங்கள் பொட்டு அம்மானைப் போரின் போது நிறைவு செய்து விட்டோம். மீண்டும் எழும்புவதென்றால், சடலங்கள் தான் எழும்ப வேண்டும். போலி பிரசாரங்களை நம்ப வேண்டாம். இராணுவத்தினர் கடமைகளை நிறைவு செய்துள்ளனர். அத்துடன் தான் யார் என்பதனை நினைவில் வைத்து கொள்ள வேண்டும் என கருணா குறிப்பிட்டுள்ளார்.

கருணா நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம். நான் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா என்பதனை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்: என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பரபரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இன்று மீண்டும் இலத்திரனியல் வாக்கெடுப்பு மூலம் உறுதிப்படுத்தப்படவுள்ளன. அதன் பின்னர் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

அதேவேளை, இன்றைய சபை அமர்விலும் தமது அணி பங்கேற்காது என்று மைத்திரி – மஹிந்த கூட்டணி நேற்று அறிவித்தது.

நாடாளுமன்றத்தில் நாளைய தினமும் (இன்று) போலியான முறையில் தீர்மானம் நிறைவேற்றச் சபாநாயகர் முயற்படுகின்றார் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே, கட்சி சார்பாகச் செயற்படும் சபாநாயகர், நீதியாகச் செயற்படும்வரை சபை அமர்வில் பங்கேற்கமுடியாது என்று தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். (ஐ)

## டிப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு டிப்பர் ரக வாகனம் ஒன்றில் மண் ஏற்றுவதற்காக வாகனத்தின் சாரதியுடன் உதவியாளர்கள் 4 பேர் சென்றனர்.

அவர்கள் டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றிய பின்னர் அதனை சிலாபத்துறைக்குக் கொண்டு சென்றனர். அதன்போது வாகனத்தின் சாரதி மற்றும் மேலும் 3 உதவியாளர்கள் முன் இருக்கையில் இருந்துள்ளனர்.

5ஆவது நபர் டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றப்பட்ட பகுதிக்கு மேல் ஏறிப் படுத்துள்ளார். டிப்பர் வாகனம் குஞ்சுக்குளத்தில் இருந்து சிலாபத்துறை நோக்கிச் சென்ற நிலையில், சிலாபத்துறைப் பகுதியில் உரிய இடத்தில் மண் கொட்டப்பட்டுள்ளது.

இதன்போது மண் மீது ஏறி படுத்தவர் உறக்க நிலைக்குச் சென்றுள்ளார். அதனால் பறிக்கப்பட்ட மண்ணுக்குள் அவர் சிக்குண்டுள்ளார்.

மண் கொட்டப்பட்ட நிலையில் மீண்டும் டிப்பர் வாகனமும் அதில் பயணித்தவர்களும் குஞ்சுக்குளம் பகுதிக்குச் சென்ற நிலையில், டிப்பர் வாகனத்தின் சாரதி மற்றும் ஏனைய மூவரும், அந்த நபரைத் தேடிய போது அவர் அங்கே இருக்கவில்லை.

மீண்டும் மண் கொட்டப்பட்ட இடத்திற்கு வந்து பார்த்தபோது, அவர் அங்கே மண்ணில் புதைந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அந்தக் குடும்பத் தலைவரை மீட்டு முருங்கன் வைத்தியசாலைக்குக் கெண்டு சென்றுள்ளனர். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவரால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவருடையது எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை மற்றும் முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமானது என்றும், பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரியும், தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஏழு பேர் கொண்ட அமர்வு முன்பாக நேற்று ஆரம்பமானது.

நாடாளுமன்றைக் கலைத்து ஜனாதிபதி வழங்கிய உத்தரவுக்கு டிசெம்பர் 7ஆம் திகதிவரை இடைக்காலத்தடை விதித்த உயர் நீதிமன்றம் 12 மனுக்கள் மீதான தொடர் விசாரணை டிசெம்பர் 4ஆம் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று கடந்த மாதம் அறிவித்தது. அதனடிப்படையின் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு விசாரணை ஆரம்பமானது. நேற்று மாலை வரை விசாரணை இடம்பெற்றது. இன்று புதன்கிழமையும் விசாரணை இடம்பெறவுள்ளது.

நேற்று மனுதாரர்கள் சார்பில் சட்ட நிபுணர்களான கனக ஈஸ்வரன், ஜயம்பதி விக்கிரமரட்ன, திலக் மாரப்பன, ஜே.சி.வெலியமுன, விரான் கொரயா, எஸ்.வி. அழகரட்ணம், சுரேன் பெர்னாண்டோ, இக்ரம் முஹமட், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தமது வாதத்தை முன்வைத்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசமைப்பைத் தவறாக புரிந்திருப்பதுடன் தான்தோன்றித்தனமாக அதனை மீறிச்செயற்படுகின்றமை ஜனநாயகத்துக்கு விரோதமான செயல். தமது வசதிக்கேற்ப அரசமைப்புச் சட்ட விதிகளின் பகுதிகளைப் பிரித்து, அதன் மூலம் புதிய அர்த்தம் கற்பிக்க முடியாது என்று மனு தாரர்களின் சட்டவாளர்கள் நீண்ட வாதங்களை நேற்று முன்வைத்தனர்.

பிரதம நீதியரசர் நளின் பெர்ரேரா மற்றும் நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, பிரசன்ன ஜெயவர்த்தன, புவனகே அலுவிகார, சிசிர டி அப்ரூ, விஜித் மலல்கொட மற்றும் முருடு பெர்னாண்டோ ஆகிய 7 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையிலேயே இந்த விசாரணை இடம்பெற்றது.

இன்றும் விசாரணை தொடரவுள்ளது. எதிர்மனுதாரர்களின் சட்டத்தரணிகள் தமது வாதத்தை இன்று முன்வைப்பர். (ஐ)

## இடைக்காலத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ இந்த மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த மனுவில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடை உத்தரவு அரசமைப்புக்கு எதிரானது என்றும், இதுபோன்ற தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இல்லை என்றும் மனுதாரர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று முன் தினம் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்குமாறு மனுதாரரான மஹிந்த ராஜபக்ஷ தனது மேன்முறையீட்டில் கூறியுள்ளார். (ஐ)

## மாற்று வழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய விரைவில் பிரதமராக நியமிப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசித்து வருகிறார் எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவையே நியமிக்க வேண்டும் என்பதில் ஐக்கிய தேசிய முன்னணி உறுதியாக நிற்கின்றது. எனினும், இதற்குப் பச்சைக் கொடி காட்ட ஜனாதிபதி மறுத்து வருகிறார்.

இந்நிலையிலேயே மாற்று நடவடிக்கை குறித்து மைத்திரி சிந்திக்கின்றார் என்றும், சமல் ராஜபக்ஷ, அல்லது நிமல் சிறிபால டி சில்வாவைப் பிரதமராக நியமிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றார் என்றும் தெரியவருகின்றது.

எனினும், இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆதரவைப் பெறுபவரையே ஜனாதிபதி பிரதமர் பதவிக்கு நியமிக்க வேண்டும்.

இருந்தாலும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இறுதிநேரத்தில் மைத்திரி மேற்படி தீர்மானத்தை எடுக்கக்கூடும் என்றும், இதனால் கொழும்பு அரசியல் களம் மேலும் சூடு பிடிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## நீதிமன்றத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரமாகச் சந்தித்தார். ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.


நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அமைவாக பொதுச்சேவைகளை எந்தவித தடைகளுமின்றித் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் கட்டளைகளையும் சகல அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரச பாதுகாப்பைப் போன்றே, நாட்டுக்கும் பொதுமக்களுக்குமான தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் குறைவின்றி நிறைவேற்றுமாறும், அனைத்து அரச சேவையாளர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமரும், அமைச்சர்களும் தமது பதவிகளை வகிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 12ஆம் திகதி வரை, இடைக்காலத் தடையுத்தரவொன்வைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவை கலைக்கப்பட்டதை அடுத்து, அமைச்சுக்களின் செயலர்களும் பதவி இழந்து விடுவார்கள் என்றும், இதனால் தற்போது அமைச்சுக்களின் செயலர்கள் எவரும் பணியாற்ற முடியாது எனவும் சட்ட வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசமைப்பின் 52 (3) ஆவது பிரிவுக்கு அமைய, அரசமைப்பின் 48 (2) ஆவது பிரிவின் கீழ், நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர், அமைச்சரவை பதவி இழக்கும்போது, அமைச்சுக்களின் செயலர்களும் பதவி இழந்து விடுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, மைத்திரியின் நேற்றைய நடவடிக்கை அரசமைப்பை மீறிய செயற்பாடாகப் பார்க்கப்படுகின்றது. (ஐ)










தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் சமூக ஜோதி வாமதேவா தியாகேந்திரனின் 67ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ரி.ஸி.ரி. மண்டபத்தில் நடைபெற்ற போது அவர் நற்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாவுக்கு திட்டங்களை வாரிவழங்கினார். அந்தப் பிறந்த தின நிகழ்வில் பங்குபற்றியோரையும் நற்பணி நிகழ்வுகளையும் படங்களில் காணலம்.


# IIS இன் உயர்கல்விக்கான புலமைப் பரிசில் திட்டம்

கடந்த 2 தசாப்தங்களுக்கு மேல் வட இலங்கையில் உயர்கல்வியை வழங்கிவரும் IIS நிறுவனம் மாணவர்களை உயர்கல்வியின்பால் உற்சாகப் படுத்தும் நோக்குடன் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் இவ்வருடம் சுமார் 1000 மாணவர்களை குடிசார் பொறியியல் (Civil Engineering), கணினி விஞ்ஞானம் (Computing), வர்த்தக முகாமைத்துவம் (Business Management) போன்ற துறைகளில் தமது உயர்கல்வி வாய்ப்புகளிற்காக எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவர்களிற்கு புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு IIS இன் முகாமை தீர்மானித்துள்ளது.

மாணவர்கள் எவ்விதமான கட்டணமின்றி இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பபடிவங்கள் பரீசிலிக்கப்பட்டு நுண்ணறிவு, பொதுஅறிவு என்பவற்றை அடிப்படையாக கொண்ட போட்டிப்பரீட்சை ஒன்றினூடாக தெரிவு செய்யப்படுவார்கள்.

போட்டிப்பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் அவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதன்படி தமது கற்கை நெறிகளுக்கான கட்டணங்களில் 100% முதல் 25% வரை புலமைப் பரிசில்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் ஊடாக கணினி விஞ்ஞானம் (Computing), குடிசார் பொறியியல் (Civil Engineering), வர்த்தக முகாமைத்துவம் (Business Management) துறைகளில் உயர் தேசிய டிப்ளோமா (HND) மற்றும் டிப்ளோமா (Diploma) கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும். உயர்தேசிய டிப்ளோமா (HND) கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் G.C.E A/L பரீட்சையில் 2 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் December 2018 இல் 18 வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் December 2018இல் 15 வயதினை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். இப்புலமைப்பரிசில் திட்டத்திற்காக பாடசாலை மாணவர்கள், O/L,A/L பரீட்சைக்கு தோற்றியமாணவர்கள், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்போர் மற்றும் பதவி உயர்வு /சம்பள உயர்வு களுக்காக உயர்கல்வியை தொடர விரும்புவோர் விண்ணப்பிக்க முடியும். பத்திரிகையில் அருகில் இருக்கும் இவ்விண்ணப்பபடிவத்தை அல்லது அதன் பிரதியை பூர்த்தி செய்து அனுப்புவதின் மூலமோ, விண்ணப்ப படிவங்களை IIS அலுவலகம், "IIS City Campus" எனும் IIS இன் facebook முகவரியில் தரவிறக்கம் செய்வதனூடாக மற்றும்' IISஇனால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி**

**15/12/2018**

**மேலதிக விவரங்களுக்கு**

**021 222 8060**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-**

இயக்குனர்,
IIS City Campus,
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

IIS CITY CAMPUS

## IIS வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2019 விண்ணப்பப்படிவம்

1. Full Name (underline your name)

2. Postal Address

3. NIC Number

4. Date of Birth
D D M M Y Y Y Y

5. Gender
Male ☐ Female ☐

6. Telephone

7. Email

8. Qualification Earned
GCE O/L ☐ GCE A/L ☐ DIPLOMA ☐
HND ☐ DEGREE ☐ OTHER (s) ☐

9. Course applied for
HIGER NATIONAL DIPLOMA ☐ DIPLOMA ☐

I hereby declare that the all information furnished above are true to the best of my knowledge andbelief.

/ /
DATE

SIGNATURE


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.